உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் | துன்மதி௵ மார்கழி௴ - தை௴ | இதழ் |
|---|---|---|
| 7 | 1921௵ டிசம்பர் - 1922 ஜனவரி௴ | 9, 10. |


உள்ளுறை — பக்கம்.


| உள்ளுறை | பக்கம். |
|---|---|
| மறுபிறப்பு வாதம் ... ... ... ... | 169 |
| சுப்பிரீங் கோடு ... ... ... ... | 172 |
| சுந்தரவல்லியின் நற்போதனை ... ... ... | 174 |
| கடவுள் அனுதிமல முதசர் ... ... ... | 179 |
| தேவார வைப்புத்தல விளக்கம் ... ... ... | 181 |
| சிசுவின் ஆகாரம் ... ... ... ... | 185 |
| சமரசஞானதீபம் ... ... ... ... | 190 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1921.**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5.50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3.00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8 நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டி யிருப்பதனாலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயா யிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபி விருத்திக்கு இன்றியமையாத கருவியா யிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது எம்மால் வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் | துன்மதிஸு மார்கழி - தைமீ | இதழ் |
|---|---|---|
| 7 | 1921ஸு டிசம்பர் - 1922 ஜனவரிமீ | 9, 10. |


## தேவாரம்.

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேத்தப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப் பெற்றேனினி
ஈசன் றன்னையு மியான்மறக் கிற்பனே.

---

## "மறுபிறப்பு" வாதம்.

(ஞானசித்திப் பிரசுரம்.)

உரோமான் கத்தோலிக்கர் ஆன்மாவுக்கு மறுபிறப்பு இல்லையென்று வாதித்து ஒரு புத்தகம் பிரசுரித்திருக்கின்றனர். அவர் விடுத்த ஆசங்கைகளும் முடிபுகளுமாகிய அவை நோக்குந்தோறும் எமக்குப் பெருநகை விளைவிக்கின்றன. பலவிடங்களிலே சைவசமயத்தவர் கொள்கையல்லாத விஷயங்கள் பலவற்றைச் சைவசமயத்தவர் கொள்கையென்று கூறி அதற்கு மறுப்புஞ் சொல்லிப் போகின்றார். அது அவரது அறிவின் மதுகையை வெளிப்படுத்துகின்றதே யன்றிச் சைவசமயத்தவரது சித்தாந்தத்தை மறுக்கு மாற்றல் பெறமாட்டாது. அதனை ஆண்டாண்டு எடுத்துக் காட்டுதும்.

"ஞானசேட்டை உள்ளதாய், அழிபுந் தன்மையற்ற சித்துப் பொருளாய் விளங்குகிற நமது ஆத்துமாவானது சந்மாந்தரங்களில் தேவராய், மனிதராய், நாற்கால் விலங்குகளாய், பறவைகளாய், ஊர்வனவாய், நீர்வாழ்வனவாய், தாவரமாய்ப் பிறந்தும் இறந்தும் உழன்றுகொண்டு வரும் என்றதே மறுபிறப்புக் கொள்கை" என்

கின்றார். சைவசமயிகள் மாத்திரமோ ஆங்கிலேய தத்துவ சாஸ்திர விற்பன்னர்களும் மனிதன் இங்கிலைக்கு வருவதன் முன்னே குரங்காதி விலங்கினங்களிலும் அதனினுங் கீழ்ப்பட்ட பிறவிகளிலும் நின்று பாரம்பரியத்தில் மாறுபாட்டு மாறுபட்டு உயர்ந்த இந்த மனிதசரீரமாகிய நிலைக்கு வந்திருக்கின்றான் என்று சாதிக்கின்றார்களே. இவர் அதனை அறியாரோ. இன்னும் இவரே "எகிப்தியர், கிரேக்கர், புத்தர் முதலிய மற்றவர்களும் மறுபிறப்பு உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" என்கின்றார். உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தவரும் மறுபிறப்பு உண்டென்று ஆய்ந்து கூற இக்கிறிஸ்தவர் மட்டும் இல்லையென்று சொல்லுவதால் ஆவதென்னை. பலர் கூற்றினும் இவரொருவர் கூற்று மேலாவதெவ்வண்ணம். அன்றியும் உலகத்தார் பலரும் உண்டென்று சொல்லும் இதனை இல்லையென்று சொல்லுகிற இவர், "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத், தலகையா வைக்கப்படும்" என்னும் நாயனார் வாக்குக்கு இலக்காவரே. இது நிற்க.

"மறுபிறப்புக் கொள்கை தொடங்கிய காலம்" என ஒன்றெழுதுகின்றார். உலகந்தோன்றி ஆறாயிர மாண்டுதா ஞயிற்றென்ற சொல்லை நம்பிய கிறிஸ்துமதாநுசாரிகள் சிலர் தம் மதாவேச நிலையில் நின்றுகொண்டு சைவசமய வேதாகமங்களையும் அவ்வெல்லைக்குட்படுத்த முயன்று ஒரு பிரமாணமுமின்றி மனம் போந்தவாறு குழறி வழிந்தவைகளையெல்லாம் இவரும் பாடமாக்கிக்கொண்டு நாகரிகம் பெருத்த இக்காலத்திலும் பேச வருவது நகையினும் நகையை விளைவிக்கும். இக்காலத்திலே உலகம் உண்டாகிப் பலகோடி வருஷங்களாயினவென்னும் சைவசமயத்தவர் கொள்கையே உலகமுழுவதும் பரந்து ஓங்க ஆறாயிரமாண்டுதா ஞயிற்று என்னும் கிறிஸ்தவர் கொள்கை பரிகசிக்கப்படுதலை இவரறிந்திலரோ! அறிந்தும் நாணத்தால் மறைக்கின்றனரோ! இதைப் பற்றி இவர் எழுதியவெல்லாம் பயனில் மொழிகளா யொழிதலின் அவற்றைக் கடைக்கணிக்காது ஒதுக்கி மேற்கோளைச் சாதிக்கு மேதுவைத தொடர்ந்து மேலே செல்லுதும்.

ஆன்மாவினியல்பு இத்தன்மைத்தென உணர்ந்தவர்க்கன்றி உணராதவர்க்கு மறுபிறப்பு உண்டென்னுமுணர்வு எழமாட்டாது. கிறிஸ்தவர்க்கோ ஆன்மவியல்பு எட்டுணையும் புலப்படமாட்டாது. நாம் பலமுறை பலரோடு வார்த்தையாட நேர்ந்தபோது "ஆன்மா எப்பொழுது எவ்விதமாய் யாரால் உண்டாக்கப்பட்டது என்பதை

விவிலிய நூலிலிருந்து காட்ட நம்மாலியலுமோ" எனவும், "ஆன்மா ஒருகாலத்து ஒருவரால் உண்டாக்கப்பட்டதெனின், அது எதுபோலும்? குடம் போலுமெனின், குடம் மண்ணாகிய காரணத்திலிருந்து காரியமாயவாறு ஆன்மா எந்தக் காரணத்தி லிருந்து காரியமாயிற்று? மண்ணணுக்கள் பல ஒருங்குகூடிக் குட மெனப்படுதல்போல எவ்வணுக்கள் ஒருங்குகூடி ஆன்மா எனப் பட்டன? பல மண்ணணுக்களின் சையோகத்தாற் பிறந்த குடம் அவ்வணுக்களின் விபாகத்தால் அழிவெய்தல்போல ஆன்மாவும் ஒரு ஞான்று அழிவெய்துமோ? பல அணுக்கள் ஒருங்கு கூடு தலைத் தவிர "உண்டாதல்" என்னுஞ் சொற்குப் பொருள் வேறு முண்டோ? ஆன்மா கடவுளால் உண்டாக்கப்பட்டதெனின், அது காரண காரிய வேறுபாடுடையதாயும் குடம்போல அழிதன் மாலைத் தாயும் ஒழியுமே? அங்ஙன மொழியுமதனை நீவிர் நித்தமா யிருக்குமெனல் எவ்வண்ணம்?" எனவும், "ஆன்மா வியாபியோ, ஏகதேசியோ? அருவமோ, உருவமோ? சரீரத்தின் மாத்திர முள்ளதோ, அதைக்கடந்து வேறிடங்களினுமுள்ளதோ? சரீரத் தின் மாத்திரமிருக்குமெனின், ஓரிடத்திருக்குமோ சரீரமுழுது மிருக்குமோ? எனவும். "ஆன்மா சித்தோ சடமோ? சித் துப்பொருள் காரியப்பாடுறுதலாகிய "உண்டாந்தன்மை" யும் பெறுமோ? பெறுமெனின், அது எதுபோலும்? எனவும் இவை போல்வனவுமாக வினவும் வினாக்களுக்கு விடைகொடுக்க விய லாது விழிபிதுங்கி நெஞ்சம் புலர்ந்து மனந்தடுமாறி எழுந்தோட அவர் நிலைகண்டு புன்னகை புரிந்து இரக்கமெய்தி வாளாவிருந்த னம். இவர் சற்றே தருக்கவுணர்வுடையார்போலவும் பதார்த்த வியல்பறிந்தார் போலவும் பேசுதலால் இவரிடத்தும் இவ்வினாக் களை விடுகின்றேம். ஆற்றலுளதேல் விவிலிய நூலுக்கு இயைய விடைதருவாராக.

இனி, இங்ஙனம் நீர் வினவுங் காரணம் யாதுபற்றியெனின், கிறிஸ்தவர்க்கு ஆன்மவியல்பு எட்டுணையும் புலப்படமாட்டாதென் பதனை யுணர்த்துதற்கேயாம். ஆன்மவியல்பு இத்தன்மைத்தென் றுணராதவர் மறுபிறப்பு உண்டென்றும் இல்லையென்றும் பகுத் துணரும் ஆற்றல் பெறார். உணர முயலினும் அது குழந்தைவாய் நுழைந்த பாலைக் குருடனுணர்ந்த கதைக்கொத்து விபரீதமாய் முடியும். ஆகலின், இவ்விஷயத்திலே இவர் தலையிட்டுக்கொள்வது வீண்செயலேயாம்.

இன்னும் மறுபிறப்பின் உண்மை யுணர்தற்குக் கன்மத்தின் இயல்பும் தெரிந்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்க்கோ கன்மவியல்பு எட்டுணையும் தெரியமாட்டாது. அதனால் மறுபிறப்பின் உண்மை மனத்திற் படிவதும் அருமையேயாம். கிறிஸ்தவர்கள் இனி யொரு சமயத்திலே நியாயத்தீர்ப்புநாள் வரப்போகின்றதென்றும் அப்பொழுது இறந்துபோன மனிதரை யேசுவானவர் எழுப்பி நித்திய மோட்சத்துக்கும் நித்திய நரகத்துக்கும் அனுப்புவாரென்றும் சொல்லுகிறார்கள். மோட்சத்துக்கும் நரகத்துக்குமாக வித்தியாசம் வைத்து அனுப்புவது யாதன் பொருட்டென்றால், அவரவர் புண்ணிய பாபத்தின் பொருட்டென்கின்றனர். அப்படியிருந்தும் கன்மபேதம் இன்னதென்று அவர்க்கு விளங்கவில்லை. நரகத்துன்பத்துக்கும் மோட்ச இன்பத்துக்கும் பாவபுண்ணியங் காரணமென ஒத்துக்கொள்ளுகிறவர்கள் மறுபிறப்பு உண்டென ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாகிறார்கள்.

(வரும்.)

---

## சுப்பிறீங்கோடு.

(இந்து சாதனம்.)

மகா மாயா தேசத்துச் சாதாக்கிய நகரத்துச் சதாசிவ சக்கிரவர்த்தியாரின் அதியுன்னத அலங்கார மாளிகையிலே ஒரு சுப்பிறீங்கோடு கூடிற்று. தைமீ கஉ அது தொடங்கப்பட்டது. பிருதிவி முதல் சிவதத்துவ மீறான முப்பத்தாறு தத்துவ இரத்தினங்களாற் குயின்ற அழகிய மந்திர சிம்மாசனம் ஒன்று அம்மாளிகை மத்தியில் இட்டிருந்தது. இம்முறை கனம் தக்ஷிணாமூர்த்தி ஐயர் சுப்பிறீங்கோட்டு நீதிவானாக அமைந்து குறித்த தேதியில் வந்து சிம்மாசனமேறினார். கஉ மணியளவில் கோர்ட்டு ஆரம்பிக்கப்பட்டது. திருநந்திதேவர் என்பவர் சுப்பிறீங்கோட்டு முதலியாராயினர். பசுபதி முதலியார் முடிப்புறத்து நியாயதுரந்தரர்.

வழக்காளி - ஆதிதேவி.

எதிரி - கறுப்பண்ணன்.

சாட்சிகள்: மாயாதேவி, இச்சாதேவி, கிரியாதேவி, ஞானம்பாள் என்னும் நால்வர்.

யூரிகள்; சதுர்முகசர்மா, நாராயணவர்மா, நீலகண்டய்யர், பரமேசுரய்யர், சதாசிவ முதலியார் என்னும் ஐவர்.

வழக்கின் விவரமானது:—பராசத்தியென்னும் ஒரு பட்ட மகிஷியின் பிள்ளையாகிய ஒரு புற்கலன் என்னும் ராசகுமாரன் பிள்ளைமையினுல் விளையாடச் சென்றபோது, குற்றவாளி அவனைக் கவர்ந்து மைபூசி மயக்கி ஆசைகாட்டி யழைத்துப்போய், மெய் யப்பன், வாகீசன், கண்ணுச்சாமி, மூக்கன், காதன் என்னும் ஐந்து வேடர்களையும் சேர்த்துக்கொண்டு, தராதல வனத்தில் வைத்து அங்கும் இங்கும் அலைத்து அலக்கழித்து, அச்சிறுவ னுடைய கிரீடத்தையும் பதக்கத்தையும் அரைஞாணையும் காற் சதங்கை, கைக்காப்புகளையும், கொற்றக்குடையையும் களவுசெய் ததுமன்றிக், கொலைசெய்யவும் முயலும்போது, மாயாதேவியென் னும் குறத்தி செவிலித்தாயரான இரண்டாம் மூன்றும் நான்காம் சாட்சிகளுக்கு அறிவிக்க, அவர்களும் அதை நேரிற்கண்டு கைத் தாயான ஆதிதேவியிடம் தெரிவித்தார்கள். ஆதிதேவி கீழ்க் கோர்ட்டு நியாயாதிபதியாகிய பிரகிருதிநகரத்துச் சங்கரசர்மா விடம் முறைப்பாடுசெய்து பிடிவிறாந்துவிட்டுப் பிடிப்பித்தனர். கருணாகரன் என்னும் போலீசுத்தலைவர் போய்ப் பிடித்துச் சோதித்த பொழுது, வேடர்கள் ஐவரும் ஓடி மறைந்துவிட, குற்ற வாளி அகப்பட்டனன். அவனிடத்தே பிள்ளையும் கழற்றப்பட்ட நகைகளும் அகப்பட்டன. கீழ்க்கோர்ட்டார் வழக்கை விசாரித் துச் சுப்பிறீங்கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர். இதுவே முன் நடந்த சம்பவம்.

பின்பு சுப்புறீங்கோர்ட்டிலும் வழக்காளியும் சாட்சிகளும் எதிரியும் விளங்கப்பட்டார்கள். வழக்காளியும் சாட்சிகளும் உண் மையை உண்மையாம்படி சொன்னார்கள். எதிரியாகிய கறுப் பண்ணன் தான் வீதியிற் போகும்போது பிள்ளை வலிந்து தன்னைத் தாவியதாகவும், அதனுல் தானும் அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு போய் வைத்திருந்ததாகவும், வைத்திருந்தவிடத்தில் நகைகளைக் கழற்றியது உண்மையென்றும், அதனுல் தான் குற்றவாளியல்ல வென்றும் கூறினன். ஆயினும் அவனிடத்தே கெட்ட எண்ண மிருப்பதைக்கண்டு, அறியாத குழந்தை தாவிவரினும் எடுத்துக் கொண்டு காட்டுக்குப்போனதும் வேடரைச்சேர்த்து நகைகளைக் கழற்றியதும் கொலைசெய்ய முயன்றதும் சாட்சிகளால் வெளிப் படுதலால், எதிரி குற்றவாளியேயாமென்றுயூரிமார் ஒரேமன தாய்ச் சொல்ல, கனம்பொருந்திய சுப்பிறீங்கோர்ட்டு நியாயாதி பதியவர்கள் எதிரியைச் சதாகாலமறியலுக்கு நியமனஞ்செய்து,

நகைகளை வாங்கி ராஜகுமாரனுக்கு அணிந்து கைத்தாயாகிய ஆதிதேவியிடம் அப்பிள்ளையை ஒப்பித்தனர். ஆதிதேவி பிள்ளையையழைத்துச்சென்று நற்றாயாகிய பராசத்தியிடம் ஒப்பித்தனள். பராசத்தி பிள்ளையை ஆவலோடு வாரியெடுத்து அணைத்து முத்தமிட்டு அரண்மனையினுள்ளே கொண்டுபோய்ப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டனள்.

(அரும்பொருள்கள்—கருப்பண்ணன் - ஆணவவிருள். புற்கலன் - ஆன்மா. ஆபரணங்களாவன - சர்வஞ்ஞதைமுதலிய அறுகுணங்கள். மற்றவையும் இங்ஙனே ஊகத்தா லுணரநிற்பன.)

---

## சுந்தரவல்லியின் நற்போதனை.

### (ஞானசித்திப் பிரகரம்.)

சுந்தரவல்லியென்னும் ஒரு நங்கை அழகில் இலக்குமியையும் அறிவில் ஔவையையும், கல்வியில் வாணியையும், ஈசுரபத்தியில் புனிதவதியாரையும், கற்பில் அருந்ததியையும், சைவசமயாபிமானத்தில் மங்கையர்க்கரசியாரையும் ஒத்தவள். மயிலின் சாயலும், குயிலின்மொழியும், அன்னநடையும் உடையவள்.

அவள் ஒருநாள் வைகறையில் எழுந்து, அவசியகருமம் முடித்துப் பல்விளக்கி வாய் கொப்பளித்து முகம் கைகால் கழுவி நெற்றியில் விபூதிதரித்து வீட்டின் முற்றத்திலும் தெருப்பக்கமாயுள்ள வாயிலிலும் சுற்றுப்புறங்களிலும் சாணந்தெளித்து அலகிட்டு வீட்டின் உட்பக்கங்களையும் அப்படியே சுத்தம்பண்ணி ஆளும் பாண்டங்களை அலம்பிக்கவிழ்த்துவைத்துவிட்டு நதியிலே சென்று ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுடித்து வீட்டை அடைந்தனள்.

பின்பு காலைப்போசனம் அமைத்து அகத்திலுள்ளவர்க்கு அளித்து அவரவர் தத்தங்கருமங்களுக்குச் சென்றதன்மேல், அயல்வீட்டிலுள்ள தன் தோழியாகிய கமலவல்லியை அவசியமான ஒருகாரியத்தின் பொருட்டுக் காணும்படி வந்தனள். அப்பொழுது விடிந்து மூன்றேமுக்கால்நாழிகை அதாவது ஏழரைமணியாயிற்று. கமலவல்லியின் வீட்டு முற்கதவு திறக்கப்பட்டிருந்தது. அறைக்கதவு தாளிட்டிருந்தது. அதனால் அப்பெண்மணி இங்கு ஒருவரும் இன்னும் நித்திரையால் எழவில்லைப்போலும் என நினைந்து, நடைகூடத்திலிருந்த ஒரு நாற்காலியில் வீற்றிருந்து சுவர்களிலே தொங்கும் அழகிய படங்களைப்பார்த்து மகிழ்ந்து

கொண்டு கமலவல்லியின் வருகையை எதிர்நோக்கியிருந்தனள். அப்பொழுது அப்படங்களின் நடுவிலே உமாசகாயராய் இடபாரூடராய் நீலகண்டராயுள்ள பரமேசுரரது அழகிய படமொன்று கண்ணிணைகளைக் கவர்ந்து பிரகாசித்தல்கண்டு, உள்ளத்தில் எழுந்த அன்பினால் அப்பெருமானைத் துதிக்கும் பாடல்களாகிய திருத்தாண்டகங்களிற் சிலவற்றை ஓதிக்கொண்டிருந்தனள். கமலவல்லியின் செவியிலே அவ்விசைபுகுதலும் அருண்டு புரண்டு எழுந்து கட்டிலைவிட்டு இறங்கி இடையில் உள்ள துணியை வாரிச்சுருட்டிக் கொண்டு அவிழ்த்த மயிரும் சோம்பிய முகமும் மூடிமூடிவிழிக்கும் பார்வையும் உள்ளவளாய் மெய்தளர்ந்து ஆடி அசைந்து கொண்டு மெல்ல மெல்லவந்து கதவின் தாளை நீக்கி நடை கூடத்தில் வந்து சுந்தரவல்லியைக் கண்டு சோம்பலோடு எதிரிலிருந்த ஒரு நாற்காலியில் இருந்தனள். இருந்தும் அசதி நீங்காமையால் உடம்பை நெளித்து முறித்துத் திமிர்வாங்கிக்கைகளில் நெட்டிமுறித்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு. "நீ எப்பொழுது வந்தாய், வந்து நேரமாயிற்றோ என்றாள்" சுந்தரவல்லி புன்முறுவலாகச் சிரித்துக்கொண்டு தன்பாடலை முடித்து, "நல்லது நீபோய் அவசியகருமம் முடித்து முகந்துலக்கிக் கொண்டுவா; பின்பு பேசிக்கொள்ளுவோம்; நான் அதுவரையில் இருக்கிறேன்" என்றாள். அவள் புன்முறுவல் செய்ததும் இப்படிச்சொன்னதும் நாணத்தை யுண்டாக்கினபடியால், இதோ வந்துவிட்டேன் இருந்து கொள் என்று சொல்லி விரைவாக எழுந்துபோய் அவசியகருமம் முடித்துத் தந்தசுத்திசெய்து முகம் கை கால் அலம்பித் துடைத்துக்கொண்டு அடுக்களைவாயிலிற் சென்று வேலைக்காரன் தந்த கோப்பிநீர்பருகி இச்சுந்தரவல்லியின் அருகேவந்து சிரித்துக் கொண்டு ஒரு நாற்காலியில் இருந்தனள். அப்பொழுது சுந்தரவல்லி சிறுநகை செய்தனள். இருவரும் உடலுயிர்போன்று மிக நேசமுள்ளவர்களாதலால், ஒருவரோடொருவர் கோபங்கொள்ள இடமில்லாதிருந்தது. பின் கமலவல்லி சுந்தரவல்லியை அன்போடு நோக்கி, என் அருமையான தோழீ, நான் நித்திரைவிட்டு எழுந்து வந்தபொழுதும் இப்பொழுதும் என்னைப்பார்த்து நீ சிரித்த காரணமென்ன? அதை எனக்குச் சொல்லவேண்டும் என்றாள். சுந்தரவல்லி "சகியே, நீ வந்த கோலத்தையும் உன் பழக்கத்தையும் பார்க்க எனக்குச் சிரிப்பு உண்டாயிற்று" என்றாள். அதுகாரணமாக அவர்களுள்ளே சில சம்பாஷணைகள் நிகழ்ந்தன.

கமல - என்கோலம் எப்படியிருந்தது? என் பழக்கத்தில் என்ன குறையிருக்கிறது?

சுந்த - தோழி, நான் சொன்னால் உனக்குக் கோபம் வருமோ?

கமல - புத்தியாகச் சொன்னால் ஏன் கோபம் வரும்; என்னுடைய நன்மையின் பொருட்டுத்தானே சொல்லுகிறாய்; நன்றாகச்சொல் கேட்கிறேன்.

சுந்த - ஏழரை மணிசென்றும் நித்திரைவிட்டெழாதிருந்து பின் என் குரல் கேட்டு எழுந்ததும், அலங்கோலமாய் வெளியில் வந்ததும் பார்க்க முதலில் சிரிப்புண்டாயிற்று. இப்பொழுது, மற்றுள்ள உன்பழக்கங்களைக் காணச் சிரிப்புண்டாயிற்று.

கமல - என் நாயகர் ஊரிலில்லாமையால் கவலையற்று அயர்ந்து நித்திரையாய்விட்டேன். அல்லாமலும் இந்த நேரத்திற்றான் நான் எப்பொழுதும் எழும்புவது வழக்கம். எழும்பொழுது உன் குரல் கேட்டபடியால் அவசரத்தில் அலங்கோலத்தோடு வந்துவிட்டேன். இதையல்லாமல் இப்பொழுது நான் செய்த குறையென்ன?

சுந்த - நல்லது, நெற்றியில் விபூதியிட்டுவா பின்பு சொல்லுகிறேன்.

கமல - ஆம், ஆம், மறந்துபோனேன். கிறிஸ்தவரது விடுதிப் பள்ளிக்கூடத்தில் என்னை இளமையிற் படிக்கவிட்டிருந்தனர் பெற்றோர். அதனால் அங்கே பழகிய பழக்கம் இன்னும் என்னை விடவில்லை. நல்லது. இப்போது பூசிக்கொள்ளுகிறேன். (விபூதி எடுத்துத் தரித்தனள்.)

சுந்த - இப்பொழுது உன் முகம் எப்படியிருக்கிறது. கண்ணாடியிற் பார். "நீறில்லாநெற்றிபாழ்" என்றும், "பூதியணியார் முகம் புறங்காடு" என்றும் அதாவது, விபூதிதரியாத நெற்றியும் முகமும் பாழும் சுடுகாடும் ஆமென்று சொல்லியிருக்கிறதே. நீ இவற்றைப் படிப்பதில்லையா?

கமல - கிறிஸ்தவர் பள்ளியில் இந்தப் பாடமும் எனக்குப் படிப்பித்தார்களா? நீ அதிட்டஞ் செய்தவள். சைவப்பள்ளியிற் படித்து எல்லாம் அறிந்துகொண்டாய்.

சுந்த - தோழீ, நீ இவ்வளவு நேரமும் நித்திரை செய்ததும், விடியற்காலத்திலே செய்யவேண்டு மவைகளைச் செயாது விட்டதும் பிழையல்லவா.

கமல - என்னபிழை, அதனால் நட்டமென்ன ?

சுந்த - எங்கள் ஆசாரங்களுக்கு மாறு அல்லவா ?

கமல - உனக்கும் இந்தப் பேய்த்தனமிருக்கிறதா ? எங்கள் முன்னோர் இப்படி அநேக காரியங்களைப் பேய்த்தனமாயெழுதி வைத்திருக்கிறார்களென்பதை எங்கள் பள்ளிக்கூடத்து அம்மா சொல்ல அறிந்திருக்கிறேன். பாதிரியார் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இதனால் ஒரு பிரயோசனமுமில்லை. அவரவர் சுகத்தை அவரவர் பார்க்கவேண்டும்.

சுந்த - ஓகோ ! உன் அறிவு இப்படித் திரிந்திருக்கிறதா ! கிறிஸ்தவர் பள்ளியிற் படிப்பதில் இவ்வளவு நட்டமிருக்கிறதென்பதை நான் இப்பொழுதுதான் அறிகிறேன் !

கமல - நல்லது, சைவாசாரங்களில் என்ன பயனிருக்கிறது? அவைகளைச் சொல் பார்ப்போம் !

சுந்த - தோழீ, சொல்லுகிறேன், கவனமாகக் கேள். சூரியன் உதிக்க ஐந்து நாழிகையுண்டென்னு மளவில் எழவேண்டும். சூரியன் கண்ணுக்குத் தெரிய ஒருமணி நேரத்தின் முன்னே அதன் கிரணமாகிய வெப்பம் பூமிக்கு வருகிறது. அதனால் பூமியில் ஒருமாறுதல் உண்டாகிறது. அப்பொழுது தான் எங்கள் உடம்பிலுள்ள வாத பித்த சிலேஷ்மங்கள் மாறுபாடடையும். அந்தநேரத்திலே நாங்கள் படுத்திருந்தால் வெப்பம் தலையிலேறிப் பித்தம் மேற்படும். அதிலிருந்து பல நோய்கள் விளையும். ஆதலால், அப்பொழுது சயனித்திருக்கலாகாது. அன்றியும் இப்படிப் பலநாள் நேர்ந்தால், மெல்லமெல்ல நோய் அதிகப்பட்டு முடிவில் நோயாளியாக்கிவிடும்.

கமல - அப்படியானால் ஐந்து மணிக்குப் படுக்கைவிட்டெழலாமே. நான்குமணிக்கே யெழச்சொன்ன காரணமென்ன ?

சுந்த - அதற்குமுன்பே உடம்பின் கருவிகள் தொழில் செய்யத் தொடங்கிவிடவேண்டும். அப்பொழுதுதான் வாதபித்த சிலேஷ்மங்கள் சமநிலைபெறும். அதுமட்டுமன்று, ஐந்துமணியளவில் நீராடவேண்டும், ஏனென்றால், அப்பொழுதுதான் நீரின் சொந்தக்குணம் நீரிலிருக்கும். மேற்பட்டால், சூரியவெப்பம் நீரிற்கலந்து நீரின்குணம் மாறிவிடும். மாறியபின் நீராடுவதால், அத்தனை நன்மையுண்டாகமாட்டாது.

கமல - அந்நேரத்தில் நீராடுவது அவசியமென்பதற்கு இன்னும் நியாயமுண்டா ?

சுந்த - உண்டு. விடியற்காலத்தில் உடம்பின் அழுக்குகளை நீக்கி, நாம் உடம்பைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இல்லாதொழியில் உடம்பின் அழுக்குகள் மயிர்க்கால்வழியாக உள்ளே சென்று இரத்தத்தோடு சுவறி எங்கும் பாய்ந்து நோய்க்கு ஏதுவாகும். அன்றியும், சூரியன்முதலிய கிரகங்களிலிருந்தும் பூமியிலிருந்தும் உடம்பில் ஏறுகின்ற பல சுத்த அணுக்கள் உட்புகும்பொழுது உடம்பின் அழுக்குகளோடு சுவறி அசுத்தமடைந்து செல்லநேரும். அதுவும் நோய்க்கு ஏதுவாம். அதனால் வெளியில் உலாவி அவ்வணுக்களை வாங்கத் தொடங்குமுன் உடம்பை அழுக்கு நீக்கிச் சுத்தமாக்கியும் வைத்தல்வேண்டும். பூமியிலும் உடம்பிலும் உண்டாகும் மாறுதல்கள் எல்லாம் ஐந்துமணி தொடக்கமே யுண்டாகின்றன. அதனால் ஐந்துமணிக்கு நீராடவேண்டுவது ஆவசியகமே.

கமல - அப்படியாயின், நான்குமணிக்கே எழுவானேன்?

சுந்த - மற்றுள்ள வேலைகளை முடித்தற்பொருட்டு.

கமல - என்ன வேலை?

சுந்த - முதலாவது, அவசிய கருமமாகிய மலசலநீக்கல்.

கமல - அதினும் ஏதாவதுண்டோ?

சுந்த - உண்டு. அது உள்ளழுக்காதலால், அதனையும் நீக்கிச் சுத்தமாயிருத்தல் வேண்டும். வாயிலுள்ள அழுக்கு நீக்கத் தந்த சுத்தி செய்துவிட வேண்டும்.

கமல - எழுந்தவுடனே கடவுளை வணங்குவது எதற்காக?

சுந்த - மனமும் புலனும் ஒடுங்கியுள்ள நேரம் அதுவேயாம். அதனால், அது கடவுளை வணங்குதற்கு நல்லநேரம். இது ஆன்மசுகத்தின் பொருட்டு. அன்றிச் சரீரசுகமுமிருக்கிறது. என்னவெனில் எழும்பொழுது மனம் ஆனந்தமாய்க் கடவுளை நினைத்தலால், இருதயம் குளிரும். உலக கவலைகளை அடைந்தால் இருதயம் வருந்திச் சூடுகொள்ளும். அதனால் இரத்தம் கொதிக்கும். அதனால் நோயுண்டாகும். ஆதலால், ஆனந்தமாய்க் கடவுளை நினைந்து வணங்குதலில் இரண்டுவகை நன்மைகள் இருக்கின்றன.

(வரும்.)

---

# கடவுள் அநாதிமலமுத்தர்.

(இந்து சாதனம்)

கடவுள் அநாதிதொட்டுப் பாசபந்தம் சிறிதும் விரவப்பெறாது விளங்குவாராதலின் அநாதிமலமுத்தர் எனப்படுவர், இதுபற்றியே அவர் "இயல்பாகவே பாசங்களினீங்கினவர்" என்று சொல்லப் படுவதூஉமென்க. அதாவது அவர் என்றுள்ளாரோ, அன்றே அசுத்தக் கலப்பாகிய பாசபந்தம் சிறிதும் இல்லார் என்றபடி. அவர் பாசபந்தமுளராயின், துக்கமோகங்களும், அவை காரண மாகப் பெறப்படும் தோற்றக் கேடுகளும் உடையோர் எனப் பட்டுப் பசுவர்க்கத்துள் வைத்து எண்ணப்பட்டுவிடுவர். பாச பந்தமுடையார் முற்றறிவு வரம்பிலாற்றல் முதலிய இறைமைக் குணங்களை வகிப்பது கூடாதாதலின், அவர் ஈச்சுரத்துவத்துக்கு உரிமையுடையாராதலுங் கூடாது அவர் தாம் பாசபந்தமுடையா ராபின், தம்மைப் போலப் பாசவலையிற்பட்டுழலும் ஆன்மாக்களை இரக்ஷித்தலுங்கூடாது. அவர் அநாதிதொட்டுப் பாசபந்த முடை யராயிருந்து இடைப்பட்டதொரு காலத்திலே அப்பாசத்தினின்று விடுதலை பெற்றாரெனின், முன்னொருகால் அவரைப் பற்றிய பாசம் பின்னும் பற்றுதல் கூடுமாதலின், அவர் நித்தியானந்தர் எனப்படு வதுங் கூடாது. அல்லாமலும் அவர் யாதொரு காலத்தாவது பாசத்திலிருந்து விடுதலை பெற்றார் எனின், அங்ஙனம் விடுதலை பெறுதற்கு அவருக்குத் துணைக்கருவியா யிருந்த பிறிதொரு பொருள் வேண்டப்படும். அங்ஙனம் யாதொரு பொருளுண்டா யின், அப்பொருள் பாசபந்தம் இல்லாத பொருளாகவே இருத்தல் வேண்டும். பாசபந்த மில்லாதபொருள் கடவுளின் வேறாகயா தொன்று இருக்குமாயின், அப்பொருளே கடவுள் எனப்படத்தக்க தன்றிப் பாசபந்தப்பட்டார் ஒருவர் கடவுள் எனப்படுதல் கூடாது. அந்தப்பொருளும் முன்னர்ப் பாசபந்தமுற்றிருந்து பின்னொரு காலத்திலே விடுதலை பெற்றதெனின், அந்தப் பொருள் விடுதலை பெறுதற்கும் பாசபந்தமில்லாத பின்னொரு பொருள் வேண்டப் பட்டு, அப்பொருளுக்கும் பின்னொரு பொருள் வேண்டப்பட்டு, இங்ஙனமே ஒன்று மற்றொன்றை அவாவி நின்று, இறுதியில் அந வர்த்தையாக முடிந்திடும். ஆகவே ஒரு காலத்தும் பாசபந்த மில்லாததொரு பொருள் வேண்டப்படுமென்பது ஒரு தலையாகத் துணியப்படும். இந்தப்பொருளே பதியாகியகடவுள் எனப்படுவது.

ஆதலாற்றானே பதியாகிய கடவுள் அநாதிமலமுத்தர் எனப் படுவர்.

கடவுள் சருவவியாபகராதலின் பாசங்களினும் வியாபித்துள் ளார் அன்றே. அங்ஙனம் பாசங்களினும் வியாபித்துள்ளாரைப் பாசபந்தமில்லார் என்பது எங்ஙனம் என்பீராயின், வியாபகமும் பந்தமும் ஒரு பொருளனவல்ல. அவை தம்முட் பெரிதும் பேத முறும். கடவுள் எல்லாப் பொருட்கண்ணும் வியாபித்துளராயி னும், அப்பொருட்குணம் தம்பால் விரவப்பெறாத பெருமை வாய்ந் துள்ளார். இந்தப் பெருமையே அவருடைய அநாதிமல முத்த தத்துவம் எனப்படுவது. தாமரையிலையிலே சலந் தங்கி நிற்பினும், அவ்விலையோடு அஃது ஒட்டின்றி நின்றாற்போல, இறைவனும் எல்லாப் பொருள்களோடும் செறிந்து விளங்குவனாயினும், அவற் றின் குணம் தன்பால் ஒரு சிறிதும் விரவப் பெறான். இதுவே அவனுடைய பெருமாட்சி; இதுவே அவனுடைய அதீதநிலை.

கடவுளுடைய சிற்சத்தியாகிய ஞானத்தை அனந்தகோடி சூரியப்பிரகாசத்தை நிகர்த்ததொரு பேரொளிப் பிழம்புக்கு ஒப் பிடலாம். இந்தப் பேரொளிப் பிழம்பை இருட்குழாங்களாகிய மலபாசங்கள் தீண்டுவது ஒருவாற்றானுங் கூடாது. ஆதலாற் றானே அவர் இயல்பாகவே பாசங்களி னீங்கினவர் எனப்படுவ தென்க.

கடவுள் அனந்தகோடி சூரியப்பிரகாச நிகர்த்த ஒளிப்பிழம் பாயின், அவருடைய சந்நிதியிலே பாசத்திரயங்கள் அமைந்து விளங்குவது எங்ஙனம் என்பீராயின், அவருடைய பேரொளிப் பிரகாசம் விளங்குவதெல்லாம் சைதன்னிய சத்தியி னன்றிச் சடப் பொருள்களினன்றாம். அந்தப் பேரொளிப் பிரகாசத்தைக் காண வல்ல சைதன்னிய சத்தியின்கண்ணே மலவிருள் தொழிற்படுவது சிறிதுமில்லை. அந்தப் பிரகாசத்தைக் காணுதற்கமைந்த சத்தி இல்லாத இடங்களின் மாத்திரமே மலவிருள் அமைந்து கிடந்து தொழிற்படுவது. இந்த இடங்களில் கடவுளுடைய வியாபகம் இல்லைகொல்லோ எனின், கடவுளுடைய வியாபகம் எங்குமுள்ள தாயினும், அவ்வியாபக ஒளியைப் புலப்படக் காணாமை பற்றியே அவ்விடங்களில் மலவிருள் தொழிற்படும். கடவுளுடைய பேரொளி சைதன்னிய சத்தியில் மாத்திரம் தோன்றுதற்குரியதோர் சூக்கும ஒளியன்றிச் சடப்பொருள்களிலும் விளங்குந் தகைத்தாயதொரு தூல ஒளியல்ல என்பது கவனிக்கத்தக்கது.

ஆணவமலமும் வியாபகமுடைத்தென்பது சைவசமயக் கொள்கையாதலால், கடவுளுடைய சொரூப வொளி விளக்கமுறு மிடங்களிலே ஆணவவிருள் இல்லை என்பது எங்ஙனம் பெறப்படுமென்பீராயின், கடவுளுடைய சொரூப விளக்கமுளதாய விடங்களிலும் ஆணவமலமுண்டு. அங்ஙனமுளதாயினும் அது விளக்கமுறாது மழுக்கமுற்றிடும். ஆதலால் அதன் வியாபகத்துக்கும் குறைவில்லை என்க. சூரிய ஒளிப்பிரகாசத்தின்முன் இருள் மறைந்திடுதலன்றி இல்லாதொழிவதில்லை. இதுபோலவே ஆணவ இருளுமாமென்க.

மழுக்கமுற்றுத் தானும் இவ்வாணவ இருள் கடவுள் சந்நிதியில் இருக்கலாங் கொல்லோ எனின், இது இருத்தல் பற்றியே ஆன்மாக்கள் கடவுளுடைய திருவருட்டிப்பியத்தை உணரவல்லாராதலின், அஃதங்ஙனமிருத்தலும் பெரும் பிரயோசனமுடைத்தாம். ஆகவே கடவுள் சந்நிதியில் மலஇருளிருத்தல் சாலுமென்க. இதுபற்றியே,

" முத்திதனின் மூன்றுமுதலு மொழியக் கேள்
சுத்த வனுபோகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பங் கொடுத்த லிறையித்தை விளைவித்தன்மலம்
அன்புடனே கண்டுகொ ளப்பா " என்றார் ஆன்றோரும்.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்.

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 17-வது ஆலக்கோயில்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிய அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயி லெழுபதினோ டெட்டுமெற்றுங், கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில் கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில், இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்து மிளங்கோயின் மணிக்கோயி லாலக்கோயில், திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத் தீவினைக ளுருமன்றே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருக்கச்சூ ராலக்கோயில் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

மேலை விதியே வினையின்பயனே விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை யெழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா

மாலே மதியே மலேமேன் மருந்தே மறவேனடியேன் வயல்சூழ்ந்த
வாலேக் கழனிப் பழனக் கச்சூ ராலக்கோயி லம்மானே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலத்தில் அச்சுவினி தேவரென்னும் தேவமருத்துவர் சிவபெருமானைப் பூசித்துத் தாஞ்செய்யும் வைத்தியத்திற்கேற்ற ஔஷதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இதற்கு ஔஷதகிரி யென்னும் பெயருமுண்டு.

சுவாமி பெயர் ஔஷதேசுரர், அம்பிகை அந்தகார நிவாரணி, ஔஷததீர்த்தம். இது சிங்கப்பெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு இரண்டு மைல் தூரத்துள்ள திருக்கச்சூரென்னும் சிவஸ்தலத்துக்கு அரை மைல் தூரத்துள்ளது. மலேக்கோயிலென வழங்கி வருகின்றது.

## 18-வது நந்திவனம்.

**திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த அடைவு திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளேச்சுர நாகேச்சுர நாகளேச்சுர நன்கான, கோடீச்சரங் கொண்டீச்சரந் திண்டீச்சரங் குக்குடேச்சுர மக்கீச்சரங் கூறுங்கால், ஆடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண்கானல் ஈடுதிரை ராமேச்சுர மென்றென் றேத்தி யிறைவனுறை சுரம்பலவு மியம்புவோமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் தரும தேவதையாகிய நந்தி பூசித்தது.

சுவாமி பெயர் நந்தீசுரர், அம்பிகை சௌந்தர நாயகி, நந்தி தீர்த்தம். கூடுவாஞ்சேரி ரெயில்வே ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்துள்ளது.

## 19-வது நாகளேச்சுரம்.

இத்தலம் நவக்கிரகங்களுள் ஒருவரான இராகுவால் பூசிக்கப்பட்டது. சுவாமி பெயர் நாகேஸ்வரர், அம்பிகை மலேமங்கை, சீகாழி ரெயில்வே ஸ்டேஷன். தோணியப்பர் ஆலயத்திற்கு வடமேற்றிசையில் நாகேசுரமுடையார் கோயிலென வழங்கி வருகிறது.

## 20-வது சேம்பங்குடி.

**திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த அடைவு திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் சேம்பங்குடி நல்லக்குடி நளி நாட்டியத் தான்குடி, கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி கருந்திட்

டைக்குடி கடையக்குடி காணுங்கால், விற்குடி வேள்விக்குடி வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி, புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி புதுக் குடியும் போற்றவிடர் போகுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் நவக்கிரகங்களுள் ஒருவரான கேதுவால் பூசிக்கப் பட்டது. சுவாமி பெயர் நர்கேஸ்வரர், அம்பிகை கற்பூரவல்லி. இதுவும் சீகாழி ரயில்வே ஸ்டேஷன். தோணியப்பர் ஆலயத் திற்கு வடகீழ்த்திசையில் 2 மைல் தூரத்துள்ளது.

## 21-வது கச்சிமயானம்.

**திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த திருவினுத் திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையா னென்னினல்லான், ஒப்புடைய னல்லனொருவ னல்லனோ ரூரனல்லனோ ருவமனில்லி, அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் காஞ்சிபுரந் திருவேகம்பத்து ளுள்ளது. பண்டா சுரன் என்னும் அசுரன் தான் பிரமதேவரிடம் பெற்ற வரபலத்தி னல் தேவராதியரது வீரியத்தையுண்டு இடுக்கண்புரிய வாற்றாத தேவர் வேண்டியபடி சிவபெருமான் ஓர் யாகமுன்னிலையில் தேவர் களோடு அவ்வசுரனையும் அவியாகவுண்டு மயானமாக்கியது.

சுவாமி பெயர் மயானலிங்கேசுரர், அம்பிகை காமாக்ஷியம் மையார்; யாககுண்டமே சிவகங்கை தீர்த்தமாயிருக்கிறது. கச்சி மயானத்திற்குக் காஞ்சீபுரமே ரயில்வே ஸ்டேஷன். அன்றியும் பின்வரும் கச்சிப் பலதளிக்கும் இதுவேயாம்.

## 22-வது கச்சிப் பலதளி.

**திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகம்.**

திருச்சிற்றம்பலம்.

எச்சி லிளமரேம நல்லூரி லம்பையங் கோட்டூ ரிறையான்சேரி
அச்சிறு பாக்கமளப் பூரம்பராவடு தண்டுறை யழுந்தூ ராறைக்
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்கோயில் கரவீரங் காட்டுப்பள்ளி
கச்சிப் பலதளியு மேகம் பத்துங் கயிலாயநாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிற் சிறந்த காஞ்சிபுரத்துள்ள பல சிவாலயங்களையும் சேர்த்துக் கச்சிப்பலதளியெனத் திருவாய்மலர்ந்தருளினார். கச்சபமென்னும் ஆமையுருவங்கொண்ட விஷ்ணு முதலாயினோர் பூசித்த கச்சபாலயமும், இதற்கு மேற்றிசையில் நாரதர் சிவனடியாரை வஞ்சித்த தோஷநிவர்த்திக்காகப் பூசித்த கயிலாயநாதராலயமும், இதற்குத் தென்றிசையில் மஹா லக்ஷுமியும், பிரஹஸ்பதியும் பூசித்த காயாரோகணேச ராலயமும், காயாரோகண திவ்ய தீர்த்தமும், இதற்குக் கீழ்த்திசையில் பணாதரேசராலயமும், இதற்குக் கீழ்த்திசையில் மணிகண்டேச ராலயமும், இதற்கு வடதிசையில் சித்தேச ராலயமும், இதற்கு அருகாமையாய் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் வழிபட்ட முத்தீசராலயமும், அன்றியும்,

வேதமே மாவிருட்சமாகக் கம்பாநதிக்கரையி லிருக்க, அம்பிகையார் 32 அறமும் வளர்த்து பிருதிவி லிங்கமாகிய சிவபெருமானைப் பூசித்துத் தழுவப்பெற்ற ஏகாம்பரநாத ராலயத்திற்குத் தென்றிசையில் சுரஹரீசராலயமும், இதற்கு ஈசானியத்தில் சாக்கிய நாயனார் வழிபட்ட வீரட்டகாசராலயமும், இன்னும் பல சிவாலயங்களும், காமக்கோட்டமென்கிற காமாக்ஷியம்மையார் தனி ஆலயமும், குமரகோட்டமென்கிற குகாலயம் முதலியனவும் உள்ளன. இதுபற்றியே நாயனார் கச்சிப்பலதளியெனத் தொகுத்து அருளிச்செய்தார்.

இங்கே சர்வதீர்த்தமென்னும் ஒரு தீர்த்தமும் உளது.

[விரிக்கிற் பெருகுமாதலால் இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.]

இதை இன்னும் விவரமாகத் தெரிய விரும்புவோர் காஞ்சிப்புராணத்தைப் பார்த்தும் போய் விசாரித்தும் தெளிக.

(இன்னும் வரும்.)

பு. வே. சுப்பராய முதலியார்.

# சிசுவின் ஆகாரம்.

(சென்னை பப்ளிஸிடி பீரோவினால் பிரசுரிக்கப்பட்டது.)

குழந்தைக்கு தாய்ப்பால் தான் மிகச் சிறந்தது; செலவில்லாதது. அது குழந்தைக்கு ஆரோக்கியத்தையும் தேஹ பலத்தையும் கொடுக்கிறது. தாய்ப்பால் எப்பொழுது வேண்டுமானாலும் குழந்தைக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறது. அது ஒருகாலும் புளிப்பதேயில்லை. பால் புளித்துப்போவதே இந்தத் தேசத்திலுள்ள அபாயம். அதைக் காய்ச்சித் தயார்செய்யவும் வேண்டாம். அளக்கவும் வேண்டாம். அதை எப்போதும் பயமில்லாமல் கொடுக்கலாம். குழந்தை பிறந்து கொஞ்சகாலம் வரையில் அதை வளரச்செய்வதற்கு என்னென்ன வஸ்துக்கள் வேண்டுமோ அவையெல்லாம் தாய்ப்பாலில் சரியான அளவாய்ச் சேர்ந்திருக்கின்றன.

குழந்தை முலைப்பாலினால் வளர்ந்தால் அது ஜீவித்திருப்பதற்கு வேண்டிய ஆஸ்பதங்களுண்டு. முலைப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வயிறு சம்பந்தமான நோய்கள் வருவது அபூர்வம்; ஆனால் தாய்ப்பாலைத் தவிர இதர பால்களைக் கொடுத்து வளர்ந்த குழந்தைகளுக்கு வெயிற் காலத்திலும் மழைக் காலத்திலும் அடிக்கடி வயிற்று வியாதிவந்து தொந்தரவு செய்யும்.

முலைப்பால் குடித்து வளரும் குழந்தைகள் ஏழைகள் வீட்டிலிருந்தாலும், ஸுகாதாரமற்ற இடங்களிலாகட்டும் வேறு எங்கேயாகட்டும் இருந்தாலும், அவை நன்றாய் விருத்தியாகின்றனவென்று கணக்கெடுத்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைக்கு வேண்டிய முலைப்பால் கொடுக்க முடியாதபடி அவ்வளவு பலஹீனம் தாய்க்குச் சாப்பாட்டுக் குறைவினால் ஏற்பட்டால் மட்டும், ஏழ்மைத்தனமானது குழந்தையின் முதல் வருஷத்தில் அபாயகரமாகிறது.

குழந்தைக்கு இயற்கையான ஆகாரத்தைக் கொடுக்காவிட்டால் அது சீக்கிரமாய் இறந்துபோகும், அல்லது ஸ்திரமாய் அதன் தேஹஸுகம் கெட்டுப்போய் விடக்கூடும். இந்தியத் தாய்மார் இந்தக் கடமையைச் செய்ய தவறுவதேயில்லை. ஆனால் அவர்கள் குழந்தையின் இரண்டாவது, மூன்றாவது வயது வரையிலுங்கூட முலைப்பால் கொடுக்கிறார்கள். இதனால் அவர்களுடைய உடம்பு பலஹீனப்படுவதுடன் குழந்தையும் சூணம் வயிறுதட்டி மெலிந்து பலஹீனப்பட்டுப் போகக்கூடும்.

குறித்த நேரங்களில் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கவேண்டியது அவசியம். குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்தால், அதன் ஜீரணம் சீக்கிரம் கெட்டுப்போகும். பால் நியாயமாய்க் கொடுக்கவேண்டிய நேரத்துக்கிடையில் அது அழுதால் அதற்கு வென்னீரை ஆறவைத்துக் கொடுங்கள். குழந்தை பசியால் அழுவதுபோலவே ஆகாரம் அதிகமாய்ப் போனாலும் தான் அழும்.

குழந்தை பிறந்து ஐந்து அல்லது ஆறுமணி நேரத்தில் அதற்கு முலைப்பால் கொடுக்கவேண்டும். அது சிணுங்கி பசியாய் இருப்பதாய்த் தோற்றினால், சர்க்கரைத் தண்ணீரைப் புகட்டுங்கள் பசுவின் பாலையாகிலும் வேறு எந்த பதார்த்தத்தையாகிலுங் கொடுக்கக்கூடாது.

முலைப்பால் உங்கள் குழந்தைச்குப் போதாவிட்டால், அதற்கு முலை கொடுப்பதை நிறுத்திவிட வேண்டாம். வைத்தியரைக் கேளுங்கள். ஒவ்வொரு தடவை குழந்தை குடிக்கும் முலைப்பாலும், அதில் பிரதி ஔன்ஸும் குழந்தைக்கு அவ்வளவும் பலம் என்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

தேஹ சௌக்கியமுள்ள குழந்தையானது பகலில் இரண்டு மூன்று மணி நேரத்துக் கொருதடவை பால் குடிக்க விழித்துக் கொள்ளவேண்டும். இரவில் இந்த இடைநேரம் அதிகமாகலாம். பகலில் பால் கொடுக்க குழந்தையை எழுப்பவேண்டியது அவசியமானல் அப்படிச் செய்யலாம். இல்லாவிட்டால் அதற்குப் பகலில் ஆகாரம் குறைந்துபோய் இரவில் தாயாருடைய தூக்கத்தைக் கலைத்துவிடும். இரவில் குழந்தையை பால் கொடுக்க எழுப்பக் கூடாது. ஆகாரமில்லாமல் இரவு முழுதும் தூங்குமானல் அவ்வளவுக்கவ்வளவு நல்லது தான்.

குழந்தைக்குப் பால் கொடுப்பதில் முலையை மாறி மாறிக் கொடுக்கவேண்டும். ஆனல், பால் குறைவாயிருந்து இரண்டு முலையும் கொடுக்கவேண்டியது அவசியமானல் அப்படிச் செய்யலாம். முலையில் கடைசியில் வரும் பாலில் தான் கொழுப்பு அதிகமாயிருக்கிற தென்பதை மறக்கக்கூடாது. இதை அங்கேயே தங்க விட்டால், குழந்தை அடுத்த தடவை பால் குடிக்கும்போது இதைக் குடிக்கும். இதன்பலன் அன்னத்துவேஷமே (dyspepsia). ஆகவே குழந்தை பால் குடிக்கையில் ஒரு முலையை பூராவாய் உண்ணவேண்டுமேயொழிய இரண்டு முலையையும் அரைவாசி

உண்ணக்கூடாது. குழந்தையை 15 நிமிஷம் முதல் 20 நிமிஷம் வரையில் பால் குடிக்கச் செய்யவேண்டும். தேஹ சௌக்கியமுள்ள குழந்தை இவ்வளவு நேரம் பால் குடித்தால் போதும்.

குழந்தைக்கு ஒரு வயதான பிறகு முலைப்பால் கொடுக்கக் கூடாது. அந்த வயதில், அதற்கு பலம் உண்டுபண்ண, இன்னும் தடிப்பான ஆகாரம் வேண்டும். குழந்தைக்கு முலைப்பால் கொடுப்பதை திடீரென்று நிறுத்திவிடக்கூடாது. ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு ஒரு புட்டி கொடுக்கலாம். பிறகு புட்டியை அதிகமாக்கிக் கொண்டு வந்து முலைப்பால் குடிப்பதற்குப் பதிலாக புட்டிப் பாலையே குடிக்கும்படி செய்யவேண்டும். கோடை காலத்தில் பேதி ஸாதாரணமா யிருக்குமாதலால் குழந்தையின் ஆகாரத்தைக் கோடை காலத்தில் ஜாக்கிரதையாய் அதிகப்படுத்தவேண்டும். மழைநாளில் முலைப்பாலை நிறுத்தாமலிருப்பது நல்லது. இதரப் பால்களைக் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் மழைநாளிலும் கஷ்டப்படுவதுண்டு. ஏனென்றால் பசுவின் பாலை அந்தக் காலத்தில் கெட்டுப்போகாமல் வைத்திருக்க முடியாது.

தாய்க்கு விஷஜ்வரம், காசம் முதலிய வியாதிகண்டு அது குழந்தைக்கும் தொத்திக்கொள்ளும்போ லிருந்தாலும் குழந்தைக்குப் பால் கொடுத்தால் அதிகரிக்கக்கூடிய விஷப்பாண்டு (Bright disease) விஷச்சளி (acute pneumonia) முதலிய வியாதி ஏதேனும் தாய்க்கு வந்தாலும் முலை கொடுப்பதை உடனே நிறுத்தி விடவேண்டும். தாய் கர்ப்பமானாலும் மார்பு வீங்கிப் புண்ணாயிருந்தாலும் குழந்தைக்கு முலை கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும்.

ஒன்பது அல்லது பத்து மாதத்தில் முலைப்பால் நிறுத்தப்பட்ட குழந்தையை ஒரு கிண்ணத்திலிருந்து பால் குடிக்கும்படி செய்யலாம். தாய்மார் புட்டியை வெகுகாலம் உபயோகப்படுத்தக்கூடாது. ஏனென்றால், பிறகு குழந்தையை புட்டி வழக்கத்தை விட்டுத் திருப்பமுடியாது; சில சமயங்களில் குழந்தையானது வேறு எவ்விதமாகவும் பாலைக் குடிக்கமாட்டேனென்று சொல்லி விடும்.

முலைப்பால் நிறுத்தியபிறகு, குழந்தைக்கு கொஞ்சம் கொஞ்சமாய் தடிப்பான ஆகாரம் கொடுக்கலாம். அரிசி, வால்கோதுமை (பார்லி), கேழ்வரகு, கோதுமைரவை, சவ்வரிசி ஆகிய இவைகளெல்லாம் கொடுக்கலாம். இந்த ஆகாரத்தையெல்லாம் முதலில்

கூழாக்கிக்கொண்டு நன்றாகக் கொதிக்கவைத்து வடிக்கட்டிக் கொள்ளவேண்டும். முதலில் மஸ்லினில் வடிக்கட்டி, பிறகு அதையே சிறு சல்லடை (strainer) யில் வடிக்கட்டிக் குழந்தைக்குப் பூராவும் கொடுத்து விடவேண்டும். மேற்சொல்லியபடியே செய்தால் திவரம்பருப்பும் உபயோகிக்கலாம். சப்பாத்தி (ரொட்டி)கள் கொஞ்சகாலம் சென்றபிறகு கொடுத்தால் தாடைகளுக்கு நல்ல வேலை கொடுத்து அவைகளைப் பலப்படுத்தும். ஆப்பில் (apple - சீமை இலந்தைப்பழம்) ஈறை விருத்திசெய்யும். தேகசௌக்கியமுள்ள குழந்தைக்குக் கடையில் செய்து விற்கும் எந்த விலையுயர்ந்த ஆகாரமும் வேண்டியதில்லை.

முலைப்பால் கொடுக்கும்போதும் புட்டியில் பால் கொடுக்கும் போதும் போலவே, முலைப்பால் நிறுத்தின பிறகும் குறித்த நேரங்களில் தான் ஆகாரம் கொடுக்கவேண்டும் குழந்தைக்கு வயது ஆக ஆக, இரண்டு ஆகாரத்துக்கு இடையிலுள்ள நேரம் அதிகப்படவேண்டும்.

குழந்தை பிறந்ததுமுதல் அதற்கு முலைப்பால் கொடாமல் வேறுவிதமாய் ஆகாரம் கொடுப்பது மிகவும் கஷ்டமான காரியம். இதில் ஜாக்கிரதையா யிராவிட்டால், குழந்தை இறந்துபோகக் கூடும்.

குழந்தை வளர்ந்து அதிக கனமாக ஆக அதற்கு அதிக ஆகாரம் வேண்டும். இந்த மாறுதல்களெல்லாம் தாய்ப்பாலில் இயற்கையாகவே உண்டாகின்றன. அது விஷயத்தில் ஒருவரும் கவலைப்படவே வேண்டியதில்லை. ஆனால், குழந்தைக்கு இதர ஆகாரங்கள் கொடுக்கப்படும்போது சில வாரங்களுக்கு ஒருதடவை அப்போதைக்கப்போது வேண்டிய மாறுதல்களை உண்டாக்கவேண்டும். ஆகவே தாயார் விசேஷமாய் முதலாவது பிள்ளை பெற்றவள் இவ்விஷயத்தில், டாக்டர் அல்லது தாதியின் ஆலோசனை கேட்டு நடக்கவேண்டும்.

வாரம் வாரம் குழந்தையை நிறுப்பதிலிருந்து குழந்தை கிரமமாய் கனம் அதிகரித்து வருகிறதென்று தெரிந்தால், அதுவே அதற்குக் கொடுத்துவரும் ஆகாரம் அதற்கு ஒத்துவருகிற தென்பதற்கும் அதன் பசியை ஆற்றுகிற தென்பதற்கும் தகுந்த அறிகுறியாகும்.

மூன்று மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பாலன்றி வேறு பால் கொடுத்து வளர்க்கப்பட்டால் அவைகளுக்கு

ஆரஞ்ஜ் (Orange) ரஸம் கொடுக்கவேண்டும். ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு இரண்டு தடவை அரை ஸ்பூன் ரசம் கொடுத்து வந்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாக்கவேண்டும். கொதிக்க வைத்து ஆறின ஜலத்தில் முதலில் அதைச் சமபாகமாய்க் கலந்து கொடுக்கலாம். குழந்தைக்கு பேதிகண்டால் அதை உடனே நிறுத்திவிடுங்கள். ஆரஞ்ஜ் கிடைப்பது அரிதாயிருந்தால், திராக்ஷைப்பழத்தையாவது தக்காளிப் பழத்தையாவது (tomatoes) உபயோகிக்கலாம். ஆனால் இவைகளின் ரஸத்தை வடிகட்ட வேண்டும்.

கறந்தபால் :—பால் இயற்கையாய்க் கையாளத் தக்கதல்ல. மனிதர்களாயிருந்தாலும் மிருகங்களாயிருந்தாலும் அந்தப் பால் தாயினிடமிருந்து குழந்தை அல்லது குட்டியின் வாய்க்கு நேராய்ப் போகவேண்டியது. இப்படி முன் ஜாக்கிரதை யில்லாவிட்டால் சிறு தூசிகள் பாலில் விழுந்து அது சுலபமாய்க் கெட்டுப்போய் விடும். குழந்தைக்கு வேண்டிய பாலை தேக சௌக்கியமுள்ள பசுக்களிடம் கறந்துகொள்ளவேண்டும்.

குழந்தைக்குபால் ஒன்றும் செய்யாதபடி செய்வதற்குச் சுலபமான மார்க்கம் என்னவென்றால், அதைக் கொதிக்க வைப்பதே. நெருப்பிலிருந்து அதை எடுத்தவுடன் சீக்கிரம் அதைக் குளிரப் பண்ணவேண்டும். பிறகு அதை ஜலமுள்ள ஒரு தாம்பாளம் அல்லது தட்டில் வைத்து, அதை சுத்தமான ஒரு துணியினால், விசேஷமாய் ஒரு மஸ்லினைக்கொண்டு மூடி, அந்தத் துணியின் நுனி தண்ணீரில் விழுந்திருக்கும்படி செய்யவேண்டும். பாலை ஒருபோதும் மூடாமல் வைக்கக்கூடாது; அதில் ஈக்கள் விழுந்து விடும். அதை நெருப்பண்டையிலும், ஸூரியக்கிரணம் படும்படியாகவும் வைக்கக்கூடாது; அப்படிச் செய்தால் அது சீக்கிரம் கெட்டுப்போகும்.

இயற்கையான உணவு தவிர வேறுவிதமான ஆகாரம் குழந்தைகளுக்குக் கொடுப்பதனால் விளையும் தீங்குகள் ஏழைகளை மட்டும் தான் பாதிக்கிறதென்பதில்லை. அப்படி வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு உண்டாகக்கூடிய அபாயங்கள் அடியில் சுருக்கமாய்ச் சொல்லப்பட் டிருக்கின்றன :—

ஜீரணக்கருவி ஸம்பந்தமான ஸகல வியாதிகளும், விசேஷமாய் கோடைகாலத்திலும் மழைநாளிலும் பேதியும்.

ஜீவதசை முழுவதும் நீடித்திருக்கும் குரூபத்தை உண்டாக்கக்கூடிய ரிக்கெட்ஸ் என்னும் வியாதி (Rickets - கூனும் வயிறு தட்டி மெலிந்துபோவது).

தொண்டையில் சதை வளர்தல் (adenoids); ஸ்கர்வி என்னும் ஒரு நோய் (இது ஆகாரக் குறைவினால் உடம்பு முழுதும் உண்டாகும் சொறி போன்ற ஒரு வியாதி).

க்ஷயரோகம், விஷஜ்வரம், வாந்திபேதி இந்த வியாதிகளின் பூச்சிகள் தொத்தியுள்ள பாலைக் குடிப்பதனால் அவ்வியாதிகள் உண்டாவது.

தேக வீரியக்குறைவு; இதன்பலனாக, ஏதேனும் வியாதி கண்டால் அதற்குட்பட்டு அதைத் தாங்கச் சக்தியற்று அதனால் சீக்கிரம் இறந்துபோகக்கூடும்.

தாகத்துக்கு ஜலம் வேண்டுமென்று குழந்தைக்குக் கேட்கத் தெரியாதென்பதும், கோடைநாளிலும் அது ஜ்வரமாயிருக்கும் காலத்திலும் அதற்கு தாகம் அதிகமாயிருக்கும் என்பதும் ஞாபகத்தில் இருக்கட்டும். பிரதிதினமும் காலையில் ஒரு பைன்ட் அல்லது அரைச்சேர் தண்ணீரைக் கொதிக்கச்செய்து அதை ஒரு சுத்தமான பாத்திரத்தில் விட்டு மூடி, குளிர்ந்த இடத்தில் வைத்து வைக்கவேண்டும். குழந்தையின் இரண்டு ஆகார வேளைக்கு இடையில் அந்த ஜலத்தை நிறையக் கொடுங்கள். எந்த தேசத்தில் பார்த்தாலும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் குடிக்க ஜலம் கொடுக்க இஷ்டப்படுகிறதில்லையென்பது அடிக்கடி கவனித்தறியப்பட்டிருக்கிறது. இது மிகவும் தப்பு அபிப்பிராயம், மிகவும் கொடுமையான வழக்கம்; கீழ்த்தேசங்களில் இந்த வழக்கம் இன்னும் விசேஷமாய்க் கொடுமையானது.

---

## சமரசஞானதீபம்

(162-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈண்டு மாயாவாதம், போலி வேதாந்தமென்று கூறி நம்மால் பஹிஷ்காரஞ் செய்யப்பட்ட சமயமே யுத்தமோத்தமமான வைதிக மார்க்கமெனவும், அதற்கிப்பெயர்களுரிமையல்லவெனவும், மாயாவாதமென வதைக் கூறுவதற்கு நியாயங்கிடையாதெனவும், மாயையென்பதொரு பொருளையே கொள்ளாத வம்மதமெப்படி மாயாவாதமாகுமெனவும், அதுவே மாயாவாதமாகுமெனி னம்மதத்துப்

பூர்வீகர் தங்கள் சாத்திரங்களில் மாயாவாதமென்னுமோர் மதத்தை நிரசிப்பதென்னையெனவும், அதனால் "மிண்டியமாயாவாத மென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தா அர்த்து" என்ன ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் கடிந்தருளிய மார்க்கமிதனைத் தென வெளிப்பட்டதெனவும், இந்த மாயாவாதப்பேரனைவிட்டொழிதலா லதற்குப் போலிவேதாந்த மென்னும்பேரு மப்படியேயாகுமெனவும், அப்படியாகுங்கால், வேதாந்தமென்னு மார்க்கம் அனதக்காட்டினும் வேறாகவுண்டாவது கூடாதெனவும், சித்தாந்தமென்னுஞ் சைவத்துக்கு அது பொருண்முடிவில் விரோதியாமையால் ஸித்தாந்தமும் அதுவேயாகுமெனவும், இரண்டுமொன்றான வுண்மையறிந்தே "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே" என்று தாயுமானவருங் கூறினாரெனவுஞ் சமாதானங்கூறித் திருப்தியடைந்து கொள்ளுமன்னோர் அறியாமை தொலைய வுரைசெய்வாம்.

போலிவேதாந்தமென யாம் நிரசிக்கு மார்க்கத்தை யுத்தமோத்தமமான வைதிக மார்க்கமென்று அவர் கூறலாலுண்டாகிய வுசிதம்யாது? கடவுளில்லை. ஆன்மா இல்லை, பூதங்களே யுள்ளவையெனக்கூறு முலகாயதனுந் தன்னை வைதிக மார்க்கத்தானாகக் கூறலால் "பூதத்தேயன்னமாகி யன்னத்தாலுடம்புபுந்தி, பேதித்தே மனமுமாகிப் பிரிந்தமை திருந்தவின்று, வேதத்தே கிடக்கவென்னே மேதினியோர்களெல்லாங், கேதத்தே வீழ்ந்து வேறு நெறிபல கேட்குமாறே" என வவனநுதாபப்படும் பிரமாண வாக்கியமே சாலும். இவன் சிவசீவர்களுக்கு நாத்திகத்வங் கூறிப் பூதங்களைமாத்திரமே யாத்திகமாகக் கொண்டவன். இவனையேனைய சமயிகளெல்லாம் நாத்திகன், நாத்திகனென வோயாது கூறுகின்றனர். மாயாவாதியுமப்படியே கூறுகின்றனன். அது அவன் பாலிழுக்கெனவறிக. அவனே ஆத்திகனாகாதபோது அவன் பிறரை ஆத்திகரன்றெனல் யாண்டிசையும்? உலகாயதன் பூதங்களுக்கு மாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிவசீவர்களுக்கு நாத்திகத்வமங்கீகரித்தபடியே மாயாவாதியாவான் சிவத்துக்கு மாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிற்சட பூதங்களிரண்டுக்கும் நாத்திகத்வமங்கீகரித்திருக்கின்றனன். சத்தாயுள்ள சிவத்தையங்கீகரித்தமாயாவாதிக்கும் அசத்தாயுள்ள பூதத்தை யங்கீகரித்த வுலகாயதனுக்குமொருதாரதம்யமும் யாம் கண்டிலம். இரண்டு பேரும் நாத்திகரென்னுந் துணிவுடைமையால், சத்தாகிய சிவத்தை மாத்திரம்

கொண்ட மாயாவாதிக்கு அசத்தாகியவுலகமும் சதசத்தாகிய வான்மாவுமில்பொருள்களாய் முடிதலி னவனை ஆத்திகனெனக் கூடாது. அசத்தாகிய வுலகத்தை மாத்திரங் கொண்ட வுலகாயதனுக்குச் சத்தாகிய சிவமும் சதசத்தாகிய வுயிருமில் பொருள்களாய் முடிதலினவனுமப்படியே முழு ஆத்திகனாகமாட்டான். மாயாவாதிக்குள்ள வாத்திகத்வமுலகாயதனுக்கு முண்டாயினமையின் மாயாவாதியாவானினி யுலகாயதனை நாத்திகனெனக் கூறித் திரிதனலஞ் செய்யாதென்க. உலகாயதன் அசத்தாகிய பூதங்களே சிற்சடங்களாய்த் திகழுமெனவும், மாயாவாதி சத்தாகிய சிவமே சிற்சடங்களாய்த திகழுமெனவுங் கூறலா லிருவர் கோள்களுமொரேதன்மையவாகியவழியும். "சத்திலசத்துரை செய்வாரகம்பிர, மத்தருன் மத்தரென் றுந்தீபற, வஞ்சகப்பித்த ரென் றுந்தீபற" என மாயாவாதியையும். "ஒருமசத்தி லுபர்சத்துதிக்குமென், றோதுவர் நாத்திகருந்தீபற, வூகமிழந் தாரென் றுந்தீபற" என வுலகாயதனையுஞ் (சித்தாந்தவுந்தியில்) யாம் கண்டித்திருத்தல் காண்க. சத்து அசத்தாகவும், அசத்துச் சத்தாகவுந் திரியமாட்டாவாகையால் நெல் கமுகாயும் கமுகுநெல்லாயு நீளாவென்னுந்தருக்கமே யதை நிறுத்த நாத்திகராகிய வவ்விருவருள் மாயாவாதியை ஆத்திகனென்கையிலப்படியே யுலகாயதனையும் ஆத்திகனென்றலிற் பழுதில்லையெனவும், உலகாயதனை நாத்திகனென்கையி லப்படியே மாயாவாதியை நாத்திகனென்றலிற் பழுதில்லையெனவுங் கற்றுணர்ந்த மேலோர் கருதாநிற்பர். இப்படி யிவர்க ளொழிபவே, சத்து, அசத்து என்னுமிரு பொருள்களையுந்தான் விவகரித்தலாலவற்றின் வேறான மூன்றாவது சதசத்தாகிய வான்மாவென்னுந் தன்னையுங் கண்டு பதார்த்தத்திரய போதமாகிய வேதாந்த ரஹஸ்யங்களைக் கண்டுணர்ந்தவனேயன்றோ ஆத்திகனாவான்? கண்டவுலகமும், காணும் ஆன்மாவும், காட்டுஞ் சிவமுமாகிய மூன்றனுளொன்று கெடினு மாண்டு ஆத்திகம் பூர்த்திகட்டாதென்க. சிதசிதீசுவர பதார்த்தத்திரய போதகர்களாகிய பாஞ்சராத்திரிகட்கு ஆத்திகத்வம் வலித்திக்குமேயெனின், அன்னோர் காணுந் தன்மையினவாகிய தம்மோடொத்த பசுக்களுளோர் பசுவையே காட்டும் பதிப்பொருளென மயங்கலாலவருக்கும் பதி நிச்சயத்தன்மையில் நாத்திகமே நிலைக்கும்.

(இன்னும் வரும்.)

# மணிமேகலா

அல்லது

## தவராஜ ரருள்பெறுஞ் சிவராஜ நாட்டரசி

என்னும்

### செவிக்கின்ப மூட்டுஞ் செந்தமிழ்ப் பொக்கிஷமாய நாவல்

தமிழ் மணங்கமழும் இந்நூலானது ஆண்பாலர்களும் பெண்பாலர்களும் நன்கு கவனித்து வாசித்து, அறிந்துகொள்ளுதற்கு அத்தியாவசியமான தெய்வபக்தி, அடியார்பக்தி, தமிழபிவிருத்தி, கற்பிலட்சணம், ஒழுக்கம் நன்னீதி இலௌகீக போதனை முதலியவற்றையும் அனேக அரிய சாஸ்திரங்களின் பெருமையையும் விளக்கி எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. கல்வியினருமைப்பாட்டினையும் தலைமையையும் செல்வத்தினிலைமையையுஞ் செவ்வனே விளக்குஞ் சிறப்புடையது. பெண்கல்வி இன்றியமையாததென்று இனிது கூறும் இயல்புடையது. கற்றோர்க்கு மற்றோர்க்கும் அரிய விஷயங்களை யறிவிக்குங் களஞ்சியம் போல்வது. செவிக்கின்பம் பயக்குஞ்செய்யுள் பல அமையப்பெற்ற அமைதியுடையது. நாவல் நாவல் என்போர்க்கு நாவிற்கின்பந்தரும் அற்புத நாவலாயும் நாடகாபிமானிகட்கு நாடகரத்தினமாயும் விளங்கும் நலனுடையது. வாசிக்குந்தோறு மனமகிழ்ச்சியே யூட்டு மாட்சி வாய்ந்தது. விடா நகைப்பையும் வியப்பையும் விளைவித்து (பல முறை படிக்கும்) விருப்பமே தருவது இத்தகைய சாம்பிரதாய நூல் இதுகாறும் வெளி வந்திராதென்பது நிச்சயம், நிச்சயம். இவ்வுண்மை அந்நூலை வாசித்துணர்ந்த பின்னரே இனிது விளங்கும். இதன் விலை ரூபா 1.

விலாசம்:—

M. A. சோமசுந்தர முதலியார்,
ஆயனூர் முத்தியர் முதலி வீதி, G. T. Madras.

---

## அறிவிப்பு.

இப்போது வி. பி. தபாலில் அனுப்பப்படுவன யாவும் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். சந்தாதாரர்கள் சந்தா ரூபா $1\frac{1}{2}$ யோடு இரண்டணா சேர்த்து ரூபா 1-10-0 கொடுக்க வேண்டியிருக்கிறது. சந்தாதாரர்களே மணியார்டர் மூலமாய் ரூபா 1-6-0 அனுப்பினால் இரண்டணா அநுகூலமாயிருக்கும். எமக்கும் பிரயாசை குறையும். இதை அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் சிந்தித்திடுக.

பத்திராதிபர்.

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஞு முதல் 1919ஞு வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 1 | 6 |
| ஞானானந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | 0 | 4 | 0 |



## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறுபிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப்படும்.


Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.